# பொருத்தமான
# பொற்பழங்கள்



திருமறை அறிஞர்
பாஸ்டர் அ. கிறிஸ்டோபர்

# பொருத்தமான பொற்பழங்கள்

★ துணுக்குகள் !

★ சம்பவங்கள் !!

★ வேத விளக்கங்கள் !!!

ஆசிரியர்
திருமறை அறிஞர்
டாக்டர். **அ. கிறிஸ்டோபர்**

வெளியிடுபவர்
**விண்ணக அப்பம்**
நேருவீதி, சூரம்பட்டி,
ஈரோடு – 9. தென் இந்தியா.

FIRST EDITION - FEB 2005
TOTAL COPIES - 2000
COPY RIGHT - TO AUTHOR
PRICE - Rs. 40.00 (IN INDIA)
BOOK NUMBER - T 48

**FOR DETAILS CONTACT**
**Rev. Dr. A. CHRISTOPHER**
**No. 4/2, NEHRU STREET, SOORAMPATTI,**
**ERODE - 638 009. S.INDIA.**
**PHONE : (0424) 2271323 (Off)**
**Cell : 98433 - 58824**
**Fax : (0424) 2277286**
**e-mail : winnagaappam@rediffmail.com**

## அணிந்துரை

திருமறைப் பெரியார்
அப்போஸ்தலர் யோபு ஞானப்பிரகாசம்
ஸ்தாபகர், இந்தியன் பெந்தெகொஸ்தே அஸம்பிளீஸ்
கோவை – 12. தென் இந்தியா.

அன்பு வாசகர்களுக்கு,

அன்பரின் நாமத்தில் வாழ்த்துக்கள். ஒரு காரியத்தை ஒருவருக்கு உரிய விதத்தில் புரிய வைக்க உவமைகளும் எடுத்துக்காட்டுகளும் மிகவும் அவசியம்.

நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவும் பரலோகத்திற்கடுத்தவைகளை பிரசங்கித்தபோது எளிய, பொருத்தமான உவமைகளைப் பயன்படுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

மிகச்சிறந்த பேச்சாளரும், எழுத்தாளருமாகிய பாஸ்டர். A.கிறிஸ்டோபர் அவர்கள், தனது அருளுரையின் பொழுது பயன்படுத்திய எடுத்துக்காட்டுகளை தொகுத்து புத்தகத்தில் வழங்கி உள்ளார்.

எங்கள் I.P.A. ஸ்தாபனத்தின் ஈரோடு, சேலம், நாமக்கல், தருமபுரி ஆகிய மாவட்டங்களின் கண்காணிப்பாளராக இருக்கும் இவர் இன்னும் பல அரிய நூல்களை எழுத அனந்த ஞானத்தையும், ஆரோக்கியத்தையும் ஆண்டவர் அருள வாழ்த்துகிறேன். ஜெபிக்கிறேன்.

ஆமென்.



## என்னுரை

இனிய வாசகர்களே!

இரட்சகரின் நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த இனிய நூலை தங்கள் கரங்களில் மகிழ்வுடன் தருகிறேன். தங்கள் அருளுரை சிறக்க மற்றவர்களுக்கு முழுமையாகப் புரிய இத்துணுக்குகளை நீங்கள் பயன்படுத்துங்கள்.

இவைகள் கடந்த காலத்தில் என் பிரசங்கத்திற்கு மிகுந்த பயனுள்ளவைகளாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்க விஷயம்.

இவைகளில் சில என் வாழ்வில் நடந்தவைகள், சில நான் கண்டவைகள், சில நான் கேட்டவைகள். எல்லோருக்கும் பயன்பட வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் இஃதிணை தொகுத்து வழங்குகிறேன். இவைகள் என் சொந்த சரக்கல்ல. எல்லாப் புகழும் கர்த்தருக்குரியது.

எனது மற்ற வெளியீடுகளை வாங்கி வாசியுங்கள். மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்துங்கள். புதிய வெளியீடுகள் தொடர்ந்து வெளிவர ஜெபியுங்கள். தாங்குங்கள்.

அன்போடும் ஜெபத்தோடும்,
அவர் சேவையில்,
அ. கிறிஸ்டோபர்.

## பொற்பழங்கள்

1. ரவிக்கை
2. மாடு ஏன் மணியடித்தது?
3. டோனாவூர்
4. ஆப்ரேஷன் வேண்டாம்
5. ஜான் விக்ளிஃப்
6. சிங்கமும் பிரசங்கியும்
7. வினோபாஜியும் காந்திஜியும்
8. எல்லாம் பெண்ணாலே
9. சூப்பர் சமாளிப்பு
10. ராஜா ராஜாதான்
11. காந்திஜியின் விவேகம்
12. நாளை நமது நாக்கில்
13. சோதனையை சாதனையாக்கு
14. எல்லாம் திரும்ப வரும்
15. பாதாளத்தில் படுவேதனை
16. கொஞ்சம் கொஞ்சமாய் கொல்லும்
17. அவரே சொல்லி விட்டார்
18. நான் பெரிய அதிபதியுடன் பேசுகிறேன்
19. கிருபையைப் போக்கடித்தவன்
20. இன்று நாய் நாளை நாமா
21. சாவைத் தடுத்த செல்



22. குடிக்காதே ஊற்றி விடு
23. இந்த கைக்கும் கொடுங்கள்
24. தோற்றத்தின்படி தீர்ப்பு செய்யாதீர்
25. தட்டாமலே திறக்கும்
26. முழங்கால் யுத்தம்
27. மாறியது நெஞ்சம்
28. ஒன்றுபட்டால்
29. ஒரிஜினல் & டூப்ளிகேட்
30. பொருத்தமில்லாத பெயர்
31. எல்லாம் நன்மைக்கே
32. எல்லோரையும் பிரியப்படுத்த முடியாது
33. பிரச்சனையே இல்லாத குடும்பம்
34. பார்த்துப் புகழுங்கள்
35. என்னே அன்பு! என்னே ஒற்றுமை!
36. பாடுபட்டால் பறக்கலாம்
37. அப்பா போட்ட திட்டம்
38. திடன் கொள்ளுங்கள் திரும்பப் பெறுவீர்கள்
39. நீதிச்சங்கிலி
40. சுத்த மனசாட்சி
41. உள்ளத்தை ஒப்புக்கொடு
42. பழக்க தோஷம்
43. பழைய பாக்கி

## 1. ரவிக்கை

இது 19ம் நூற்றாண்டில் இந்தியாவில் நடைபெற்ற உண்மைச் சம்பவம். ஜாதியக் கொடுமை தலைவிரித்தாடிய காலம் அது. மேல் சாதி என்று சொல்லிக் கொள்ளுகிற சிலர் பெருவாரியான மக்களை அடிமைகளாகவும், மிருகங்களாகவும் நடத்திக் கொண்டிருந்தார்கள்.

அந்த கால கட்டத்தில் தான் (கி.பி. 1818) மிஷனரி **மிட்** குமரி மாவட்டத்தில் பிறந்தார். மக்களைக் கண்ட அவருக்கு ஒரே வியப்பு. காரணம், சிறு பெண் முதல் கிழவி வரை இடுப்புக்கு மேல் உடையணியாமலிருந்தனர். இது என்ன அநாகரிகம்? **மிட்** கேட்டார். நாங்கள் எல்லாரும் கீழ் ஜாதிக்காரர். மேலாடை அணிய உரிமை கிடையாது என்று கோரசாக பெண்கள் பதிலுரைத்தனர்.

இவர்கள் ஊழியத்தினால் ஈர்க்கப்பட்ட இசக்கி என்ற பெண்ணுக்கு திருமதி. **மிட்** அவர்களும், திருமதி. **மால்ட்** என்பவர்களும் எலிசபெத் என்ற பெயரை வைத்ததுடன் கழுத்து முதல் கை வரை, கழுத்து முதல் இடுப்பு வரை மூடக்கூடிய ஜிப்பா வடிவிலான புதிய உடையை வடிவமைத்து தைத்துக் கொடுத்தனர். இதற்கு 'குப்பாயம்' என்று பெயர். இதுதான் இன்றைய ரவிக்கையின் முன்னோடி.

இதை அணிந்து கொண்டு போன இசக்கி என்ற எலிசபெத் என்ன ஆனாள் தெரியுமா? மேல் சாதிக்காரரால் நிர்வாணப்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டாள். இதன் பின்னணியில் எழுந்தது தான்



'தோள் சீலை' போராட்டம் 1822 முதல் 1859 வரை நடைபெற்ற இந்த போராட்டம் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது.

மானத்தை மூட கற்றுக் கொடுத்தது கிறிஸ்தவர்கள் தான். அதிலும் ரவிக்கை போடும் பெண்கள் இதை மறந்து விடக்கூடாது.

## 2. மாடு ஏன் மணியடித்தது?

இதுவும் ஒரு உண்மைச் சம்பவம். கிறிஸ்தவ தேவாலயங்களில் மணியோசை கேட்பது இயல்பு. ஆலய ஆராதனைக்கு ஒரு விதம், மங்கள காரியங்களுக்கு ஒருவிதம், துக்க நிகழ்வுகளுக்கு ஒருவிதம் என்று புரிந்து கொள்ளும் விதத்தில் விதவிதமான மணியோசைகள் ஆலய வளாகத்தில் இருந்து எழும்பும்.

இப்படித்தான் ஒருநாள் இரவு ஒற்றை மணி விட்டு விட்டு அடித்தது. சுற்று வட்டார மக்கள், என்ன இது துக்க மணி? யார் மரித்துப் போனார்கள்? அப்படித்தான் யார் மரித்தாலும் இரவில் துக்க மணி அடிக்கக்கூடாதே, ஏன் அடித்தார்கள்? எப்படி அடிக்கலாம் என்று ஏகப்பட்ட கேள்விகளுடன் (எரிச்சலுடன்) ஆலய வளாகத்திற்குள் அவசரமாய் நுழைந்தனர். வந்த அத்தனை பேருக்கும் வியப்பு. கூடவே சிரிப்பு, காரணம் மணியடித்தது மனிதன் அல்ல. மாடு! மணியின் கயிறு மாட்டுக் கொம்பில் சிக்கிக் கொண்டதால், அதிலிருந்து விடுபட மாடு முயற்சித்தால் மணியோசை எழும்பியது. சிரிப்பு வருகிறதா? மேலே வாசியுங்கள்.

அத்தனை பேர்களும் ஆலயத்தின் பக்கம்

திரும்பினார்கள். போதகரும், அவரது மனைவியும், அவரது மகளும் அழுது கொண்டே வெளியே வந்தனர். ஏன் அழுகிறீர்கள் என்று சபையார் கேட்டனர். அயர்லாந்திற்கு மிஷனரியாக சென்ற என் அண்ணன் மரித்து விட்டதாக இப்போது தான் செய்தி வந்தது. இதை சபையாருக்கு தெரிவிக்க வேண்டும். ஆலய விதிப்படி இரவில் துக்க மணி அடிக்கக் கூடாது. அப்பா துக்கம் தாளாமல் ஆலய பீடத்தில் அழ ஆரம்பித்து விட்டார். என்ன ஆச்சரியம்! மணியோசை கேட்டது. மக்கள் வந்து விட்டனர் என்று கண்ணீரோடு சொன்னாள் போதகரின் மகள். சபையார் கண் கலங்கினர்.

கர்த்தர் தம்முடைய ஊழியக்காரனுடைய ஜெபத்தைக் கேட்கிறவர். தமக்கு ஊழியம் செய்கிறவர்களை கனப்படுத்துகிறார். அதுசரிங்க, மாட்டுக்காவது மனசுக்குள்ள ஈரம் இருக்கு மனுஷனுக்கு?

**குறிப்பு :** இது பாளையங்கோட்டை பெருமாள்புரத்தில் 1978ஆம் ஆண்டில் நடைபெற்றது.

## 3. டோனாவூர் :

தமிழ் வேதாகம மொழிபெயர்ப்பு வரலாற்றில் சீகன் பால்கு ஐயர், பெர்சிவெல் வரிசையில் இரேனியஸ் அவர்களுக்கும் பெரும் பங்கு உண்டு. நெல்லை அப்போஸ்தலர் என்று அழைக்கப்பட்ட இரேனியஸ் அவர்களுடைய சேவை மகத்தானது. கி.பி. 1826ல் தன் சொந்த தேசத்திலிருந்த கவர்னரிடத்தில் பணம் பெற்று



அந்த தொகையைக் கொண்டு நெல்லை மாவட்டத்தில் ‘புலியக்குறிச்சி’ என்ற இடத்தை வாங்கி அதற்கு நிதித் தந்தவரின் பெயராகிய ‘டோனா’ நினைவாகிய ‘டோனாவூர்’ என பெயரிட்டார்.

அந்த புதிய குடியிருப்பில், கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்களை குடி அமர்த்தினார்.

ஏமிகார்மைக்கேல் அம்மையாரையும் அவரது சேவையையும் உலகத்திற்கு காட்டிய டோனாவூர் தான் அந்த ஊர்.

சொந்த மண்ணிலேயே உரிமை இழந்த மக்களுக்கு, பணத்தைக் கொடுத்து சொந்த மண்ணையே வாங்கி கொடுத்து உரிமையுடன் வாழ வைத்தது தான் கிறிஸ்தவம்.

## 4. ஆப்ரேஷன் வேண்டாம் :

ஒருநாள் ஈரோட்டில் உள்ள ஒரு மருத்துவமனைக்கு சென்றிருந்தேன். மூன்றாவது தளத்திலிருந்து கீழே இறங்குவதற்காக ‘லிப்ட்’டை நோக்கி வந்தேன். அங்கே ஏகப்பட்ட கலாட்டா. சக்கர நாற்காலியில் உள்ள ஒருவரை நான்கு நர்சுகள் லிப்டுக்குள் தள்ள அவரோ லிப்ட் கதவை பிடித்துக் கொண்டு எனக்கு ஆபரேஷன் வேண்டாம் என அலற ஒரு பெருங்கூட்டமே கூடிவிட்டது.

சூழ்நிலை சிக்கலாக, மருத்துவமனை உயர் அதிகாரி மாடிப்படி வழியாக ஓடி வந்தார். நோயாளியின் கையைப் பிடித்துக் கொண்டார். “ஐயா, உங்களுக்கு ஆப்ரேஷன் வேண்டாமா? அப்போ வீட்டிற்கு

போறீங்களா? நானே உங்களை அழைச்சிட்டு போறேன். வாங்க'' என்று சொல்லி லிப்டுக்குள் பாய்ந்தார். நாற்காலியை உள்ளே இழுத்தார். சுவிட்சை போட்டார். லிப்ட் தரை தளத்திற்கு சென்று விட்டது. அவரை மெதுவாக வெளியே இழுத்து பணியாள் உதவியுடன் அறையில் படுக்க வைத்துவிட்டனர்.

இதில் என்ன இருக்கிறது என்று கேட்கிறீர்களா? ஆப்ரேஷன் தியேட்டர் மூன்றாவது தளத்தில் தான் இருக்கிறது. அவருக்கு ஆப்ரேஷன் முடிந்து நான்கு மணி நேரமாகி விட்டது. அவரை கீழே அழைத்துச் செல்லத்தான் இந்த பாடு. அவருக்கு மயக்கம் தெளிந்த பிறகு, ஆப்ரேஷன் வேண்டாம். வேண்டாம் என்று புலம்புகிறார்.

இப்படித்தான் நாமும் பல காரியங்களை கர்த்தர் நமக்கு செய்து முடித்த பிறகும், வேண்டாம் வேண்டாம் என அலறிக் கொண்டு இருக்கிறோம். லிப்ட்டை பார்த்து தியேட்டர் என்று அவர் அலறினது போல விடுதலையின் வழியை விபரீதங்கள் என்று அலறுகிறோம். மயக்கத்தை விட்டு வெளியே வாங்க.

## 5. ஜான் விக்ளிஃப் :

ஆங்கில வேதாகமத்தின் தந்தை என்று வில்லியம் டின்டேல் அழைக்கப்பட்டாலும், ஆங்கில வேதாகமத்தின் முன்னோடி ஜான் விக்ளிஃப் தான். அவர் தான் ஆங்கில வேதாகமத்தை முதலில் மொழி பெயர்த்தார்.

'சீர்திருத்த விடிவெள்ளி' என்று அழைக்கப்படும் அளவிற்கு புரட்சிகரமாக கருத்துக்களை வெளியிட்டவர்



இவர். இவரது ஆங்கில மொழிபெயர்ப்பு பகுதிகளும், புரட்சிகரமான எழுத்துக்களும் மக்கள் மத்தியில் பெரும் விளைவை உண்டாக்கின.

இவர் மரித்துப் போனார். விஷயம் முடியவில்லை. இங்கிலாந்து அரசும் விட்டபாடில்லை. அவரது ஆங்கில வேத மொழிபெயர்ப்பிற்காகவும், புரட்சி எழுத்துக்களுக்காகவும் தண்டனை விதிக்க எண்ணியது.

சுமார் 100 ஆண்டுகளுக்குப் பிறகு, விக்ளிஃபின் எலும்புகள் தோண்டி எடுக்கப்பட்டது. சுமார் இருபது ஆண்டு கால விசாரணைக்குப்பின் அந்த எலும்புகள் எரிக்கப்பட்டன.

பார்த்தீர்களா? வேதத்தை மொழி பெயர்த்ததிற்காக, உண்மையை சொன்னதற்காக செத்த பின்னும் தண்டனையை அனுபவித்தார் விக்ளிஃப்.

இப்படிப்பட்ட பரிசுத்தவான்களின் சீரிய தியாகத்தால் தான் சுகமாய் இன்று வேதத்தை வாசிக்கிறோம்.

## 6. சிங்கமும் பிரசங்கியும் :

ஒரு கூட்டத்திற்கு பிரசங்கிக்கும் படியாக காட்டுப்பாதை வழியாக ஒரு ஊழியர் நடந்து சென்று கொண்டிருந்தார். எதிர்பாராத விதமாக ஒரு சிங்கம் அவருக்கு எதிர்ப்பட்டது. அதுவோ மகா பசியாயிருந்தது. இவர்மேல் பாய்ந்து குதற ஆயத்தமானது.

இந்த ஊழியருக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. தன்னை தைரியப்படுத்திக் கொண்டு,

சிங்கத்தைப் பார்த்துப் பேச ஆரம்பித்தார், ‘‘ஏ! சிங்கமே, சற்று பொறு என் பிரசங்கத்தைக் கேட்க பக்கத்து ஊரிலே ஆயிரக்கணக்கான மக்கள் மணிக்கணக்காய் காத்திருக்கிறார்கள். நான் போகவில்லை என்றால் அவ்வளவு பேரும் வாழ்க்கையில் பெரிய இழப்பை சந்திப்பார்கள். என்னை நீ நம்பு. நான் போய் ஒரு பிரசங்கம் பண்ணி விட்டு திரும்ப இங்கு வருகிறேன். நீ விருப்பம் போல் என்னை அடித்து சாப்பிட்டுக் கொள்’’ என்றார்.

சிங்கம் பசியை மறந்தது. சிரித்துக்கொண்டே, ஓ! நீங்கள் பிரசங்கியாரா? உங்கள் பிரசங்கத்தைக் கேட்க ஆயிரம் பேரா? ரொம்ப சந்தோஷம். நீங்கள் சொல்கிறபடியே போய்ட்டு வாங்க ஆனா ஒரு கண்டிஷன், நீங்கள் இங்கிருந்து புறப்படுவதற்கு முன்னால் எனக்கொரு ஐந்து நிமிஷம் பிரசங்கம் பண்ணுங்கள் என்றது.

பிரசங்கியாருக்கு மகா சந்தோஷம். உச்சஸ்தாதியில் பிரசங்கத்தை ஆரம்பித்து விட்டார். என்ன நடந்தது தெரியுமா? அடுத்த நிமிஷமே அந்த சிங்கம் கிறுகிறுவென சுற்றி தரையில் தொப்பென்று விழுந்து, சலனமில்லாமல் கிடந்தது.

பிரசங்கியார் பார்த்தார். இது தான் நல்ல சமயம், தப்பித்து விடுவோம் என்று எண்ணி நடக்கிற சத்தம் கூட கேட்காத அளவிற்கு பூனை மாதிரி மெதுவாய் நடந்து சுமார் 100 மீட்டர் தள்ளிப் போய், ‘‘அப்பாடா! இந்த சிங்கத்திடமிருந்து தப்பிச்சிட்டோம்’’ என்று கத்திக்கொண்டே ஓட்டம் பிடித்தார்.



அந்த சத்தத்தைக் கேட்டு சிங்கம் எழுந்தது, ‘‘அப்பாடா! இந்த பிரசங்கியார்கிட்ட இருந்து நாம் தப்பிச்சிட்டோம்’’ என்று காட்டுக்குள் ஓடிவிட்டது.

சிலருக்கு நாம நல்லா பிரசங்கிக்கிறோம் என்ற நினைப்பு! உண்மையில் ஜனங்களுக்கு கிறுகிறுப்பும், மயக்கமும் தான் வருகிறது.

ஊழியர்களே! உங்கள் பிரசங்கத்தில் மக்களை நோகடிக்காதீர்கள், சாகடிக்காதீர்கள்.

## 7. வினோபாஜியும், காந்திஜியும் :

அண்ணல் மகாத்மா காந்தி தன் சொந்த கைப்பட கடிதம் ஒன்றினை எழுதி, அதை வினோபாஜிக்கு அனுப்பி வைத்தார். அந்தக் கடிதத்தை வாங்கி வாசித்த வினோபாஜி, அதைப்படித்து முடித்துவிட்டு பக்கத்திலிருந்த குப்பைக்கூடையில் போட்டுவிட்டார்.

சுற்றியிருந்தவர்களுக்கு ஒரே ஆச்சர்யம், ‘என்ன இது, காந்தி எழுதிய கடிதம் அல்லவா? போற்றி பாதுகாக்கப்பட வேண்டிய பொக்கிஷமாயிற்றே, இதைப் போய் குப்பையில் போட்டுவிட்டாரே’ என்று பிரமித்தார்கள்.

ஒருவர் துணிந்து வினோபாஜியிடம் கேட்டு விட்டார். வினோபாஜி சொன்னார். காந்தியின் கடிதம் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டிய பொக்கிஷம் தான். ஆனால் அந்த கடிதத்தில், ‘நீங்கள் தான் நான் கண்ட மனிதர்களில் ஒரே மகாத்மா’ என்று என்னைக் குறித்து எழுதியிருந்தார். அந்தப் புகழ்ச்சியை நான் விரும்பவில்லை. அதனால் தான் குப்பைக் கூடையில்

போட்டு விட்டேன் என்றார்.

ஆஹா! உண்மையில் வினோபா மகாத்மா தான். நம்ம பிரசங்கிமார்களைப் போலவே, யாராவது ஒரு போஸ்ட் கார்டு போட்டாக் கூட விடமாட்டார்கள். அதையும் படம்பிடித்து பத்திரிக்கையில் போட்டு, தங்கள் பெயரை பிரஸ்தாபப்படுத்திக் கொள்வார்கள்.

நாம் சிறுக, அவர் பெருக, நமக்குள் தெளிவான வாஞ்சை இருக்க வேண்டும்.

## 8. எல்லாம் பெண்ணாலே :

இரண்டு சாமியார்கள் இமயமலை அடிவாரத்தில் ஒருவரையொருவர் சந்தித்துக் கொண்டார்கள். சிறிது நேரம் பழகியவுடன், ஒருவரைக்குறித்து ஒருவர் விசாரிக்க ஆரம்பித்து விட்டனர்.

முதலாமவர் அடுத்தவரைப் பார்த்து, "நீங்கள் ஏன் சன்னியாசியாகி விட்டீர்கள்" என்று கேட்டார். அதற்கு அவர் "நான் ஒரு பெண்ணை மிகவும் நேசித்தேன். ஆனால் எங்கள் காதல் நிறைவேறவில்லை. அவள் வேறொருவனுக்கு மணமுடித்து கொடுக்கப்பட்டாள். அந்த விரக்தியில் தான் சன்னியாசியாகி விட்டேன்" என்று புலம்பினார். அதோடு விடவில்லை நீங்கள் ஏன் சன்னியாசியாகி விட்டீர்கள் என்று எதிர் கேள்வி கேட்டார்.

அடுத்தவர் அழ ஆரம்பித்து விட்டார், "ஐயா! நீர் கட்டாமல் விட்டு விட்ட அந்தப் பெண்ணை கட்டிக்கொண்ட துர்பாக்கியசாலி நான்தான். அவள் இம்சை தாங்காமல் தான் சன்னியாசியாகி விட்டேன்" என்றார்.



பாருங்கள்! ஒரே பெண் கல்யாணம் கட்டாமல் ஒருவனை சன்னியாசியாகவும், கல்யாணம் கட்டி இன்னொருவனை சன்னியாசியாகவும் மாற்றிவிட்டாள். அவளாவது பரவாயில்லை. பைத்தியக்காரனாய் மாற்றிவிட்ட பெண்கள் கூட இருக்கிறார்கள். வாலிபர்களே! எச்சரிக்கை, மாயையான வழியில் விழாதீர்கள்.

## 9. சூப்பர் சமாளிப்பு :

அது ஒரு பள்ளிக்கூடம். பிள்ளைகளை படிக்கச் சொல்லிவிட்டு, ஆசிரியர் சாவகாசமாக படுத்து துூங்க ஆரம்பித்து விட்டார். எதிர்பாராத விதமாக கல்வி ஆய்வாளர் பள்ளியை பார்வையிட வந்து விட்டார். வந்தவர் நேரே இந்த குறிப்பிட்ட வகுப்பை நோக்கி வந்து கொண்டிருந்தார். மாணவர்கள் எல்லாம் அரசல் புரசலாக இந்த செய்தியை ஆசிரியருக்கு சொல்லி விட்டு அமைதியாகிவிட்டனர். ஆசிரியர் திடீரென்று விழித்து எழுந்தார். அவர் கழற்றி மாட்டி வைத்திருந்த சட்டையை போட்டுக் கொள்வதற்கு நேரமில்லை. காரணம், ஆய்வாளர் வகுப்பறையின் அருகே வந்து விட்டார்.

ஆசிரியர் என்ன செய்தார் தெரியுமா? வெற்றுடம்புடன் மாணவர் முன்பு பாடம் நடத்த ஆரம்பித்து விட்டார், "மாணவர்களே! இதுதான் விலா எலும்பு" என்று தன்னுடைய எலும்புகளைத் தொட்டுத் தொட்டு காண்பித்துக் கொண்டு இருந்தார். இதனைக் கண்ணுற்ற கல்வி ஆய்வாளர்க்கு சொல்லொன்னா மகிழ்ச்சி. "இவரல்லவா ஆசிரியர் எவ்வளவு பொறுப்பாக

தத்ரூபமாக பாடம் எடுக்கிறார்'' என்று தலைமை ஆசிரியரிடம் புகழ்ந்தார்.

அவர்கள் போன பின்பு ஆசிரியர், அப்பாடா! மீதித் தூக்கத்தை தொடர்வோம் என்று படுத்துத் தூங்க ஆரம்பித்து விட்டார். அந்தப் புறமாக சென்ற கல்வி ஆய்வாளர் இந்த வகுப்பு வழியாக திரும்பி வந்தார். இந்த விசை வாத்தியார் வசமாக மாட்டிக் கொண்டார். இவர் தூங்குவதைப் பார்த்து விட்ட ஆய்வாளர் தலைமை ஆசிரியரை அர்த்த புஷ்டியுடன் பார்த்தார்.

தலைமை ஆசிரியர் அசரவில்லை, ''நீங்கள் சொன்ன மாதிரி தத்ரூபமாக பொறுப்பாக, 'தூங்குவது எப்படி?' என்று பாடம் நடத்துகிறார்'' வாருங்கள் என்று சொல்லி ஆய்வாளரை அழைத்துக்கொண்டு போய் விட்டார்.

தப்பு செய்துவிட்டு சமாளிக்கிறவர்கள் பலர் இருக்கிறார்கள். தப்பு செய்பவர்களை சமாளித்து காப்பாற்றுகிறவர்களும் இருக்கிறார்கள். தப்பு செய்தவன் திருந்த வேண்டும். தப்பு செய்தவனை திருத்த வேண்டும்.

## 10. ராஜா ராஜாதான் :

நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்து ராஜாதி ராஜா. அவர் திரும்ப இரண்டாம் விசை வருகிற போது ராஜாதி ராஜாவாய் வருவார். ராஜாதி ராஜாவாய் வருவார் என்று வேதம் சொல்கிறது.

அவருடைய முதலாம் வருகையைக் கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். அவர் ஏழைக் கோலம் பூண்டு,



மாட்டுத் தொழுவத்தின் முன்னனையில் கிடத்தப் பட்டிருந்தாலும் அவரைப் பார்க்க தேடி வந்தவர்கள், ''யூதருக்கு ராஜாவாய் பிறந்திருக்கிறவர் எங்கே?'' என்று தான் கேட்டனர்.

அதுமட்டுமா! அவருடைய சிலுவைக்காட்சியைப் பாருங்கள். ஈனச் சிலுவையிலே, கள்வர் மத்தியிலே அந்தக் கேடடைந்து அவர் தொங்கினாலும் அவர் தலையின் மேல் சிலுவையில் பொருத்தப்பட்ட வாசகத்தை வாசித்துப் பாருங்கள். 'இவர் யூதருடைய ராஜா'

ஆம்! நம்முடைய இரட்சகர் ராஜா, மரணத்திலும் ராஜா, மறுபடி வரும்போதும் ராஜா. அவர் எந்த நிலையிலும் ராஜாவாய் இருந்தார். அப்படியானால் ஏழ்மையிலும், தாழ்மையிலும், பாடுகளிலும் நாம் ராஜாக்கள் தான். நமது அழைப்பை, அந்தஸ்தை யாராலும் மாற்ற முடியாது.

## 11. காந்தியின் விவேகம் :

இந்தியா சுதந்திரம் பெற்ற பொழுது, கோட்டையின் மீது பறந்து கொண்டிருந்த ஆங்கிலேயருடைய கொடியை இறக்கி விட்டு, இந்திய தேசியக் கொடியை ஏற்ற வேண்டுமென்று நமது தலைவர்கள் நினைத்தனர்.

இந்தக் காரியத்தை செய்து விடும்படி அண்ணல் காந்திஜியை கேட்டுக் கொண்டனர். காந்திஜியோ வேறு யாராகிலும் செய்யுங்கள் என்று சொல்லி விட்டார். மற்றவர்கள் எவரும் அக்காரியத்தை செய்ய முன்வரவில்லை. எல்லோரும் ஏகமனதாய் காந்தியிடமே வந்தார்கள், ''நீங்கள் இந்தக் காரியத்தை செய்யாவிட்டால்

பரவாயில்லை, யார் இதை செய்ய வேண்டும் என்று பெயரையாவது சொல்லுங்கள்'' என்றனர்.

காந்திஜி, ''அந்த வேலையை மவுண்ட் பேட்டர்ன் பிரபுவிடம் கொடுங்கள்'' என்றார். எல்லோரும் ஆச்சரியத்துடன் அவரைப் பார்த்தனர்.

''யார் தங்கள் கொடியை ஏற்றினார்களோ, அவர்களே தங்கள் கொடியை இறக்க வேண்டும்'' என்று நினைத்த காந்திக்கு தனது நாட்டின் கொடியை தானே இறக்கிவிட்டு, நமது நாட்டின் கொடியை மவுண்ட் பேட்டர்னே ஏற்றும்படி செய்தது எவ்வளவு விவேகமாக செயல், ஆரோக்கியமான அரசியல் என்பதை எண்ணி ஆவிக்குரியவர்கள் தங்கள் வாழ்க்கையில் செவ்வையாய் நடந்து கொள்வது நல்லது.

## 12. நாளை நமது நாக்கில் :

அது சுதந்திர போராட்ட காலம். வெள்ளையனே வெளியேறு என்ற இயக்கம் மிகத் தீவிரமாய் நடந்து கொண்டிருந்தது.

தனது தந்தை மோதிலால் நேருவைப் பார்த்து ஜவஹர்லால் நேரு, ''அப்பா ஏன் இந்த இயக்கம், எதற்கு இந்த போராட்டம்'' என்று கேட்டார்.

மோதிலால் என்ன சொன்னார் தெரியுமா?, ''மகனே, வெள்ளையன் வெளியேறினால் உன்னைப் போன்றோர் இந்த நாட்டை ஆளுவார்கள்'' என்று சர்வ சாதாரணமாக பதிலுரைத்தார்.

யோசித்துப் பாருங்கள். மோதிலாலின் வார்த்தை வாழ்த்தாகவே மாறியது. சுதந்திர இந்தியாவின் முதல்



பிரதமராக ஜவஹர் வந்தது மாத்திரமல்ல, அவரது மகளும், அவரது பேரனும் இந்த நாட்டை ஆண்டார்கள்.

பிரியமானவர்களே! விசுவாச வார்த்தையை பேசுங்கள். தூரா தரிசனத்தோடு பேசுங்கள். பெற்றோர்களே, உங்கள் பிள்ளை ஊக்கப்படும்படி ஆசிர்வாதமான வார்த்தைகளை அவர்களுக்கு அள்ளிக் கொடுங்கள்.

## 13. சோதனையை சாதனையாக்கு :

தொடர்ந்து இடறலா? சோர்ந்து போகாதீர்கள். உங்களாலும் வெற்றி காண முடியும். உங்களுக்குத் தேவை திட நம்பிக்கை.

ஒரு வயதான கழுதை இருந்தது. இது உதவாது என்று எண்ணிய அதன் சொந்தக்காரர் அதை ஒரு குழியில் தள்ளிவிட்டார். அதனால் அந்த குழியை விட்டு வெளியேற முடியவில்லை.

அந்த சொந்தக்காரன் அத்தோடு விடவில்லை. கழுதையை குழியோடு மூடி விட எண்ணி, கூடை கூடையாய் மண்ணை வாரி கழுதை மீது கொட்டினான். கழுதை பயப்படவும் இல்லை பதறவும் இல்லை. அது தன் திட நம்பிக்கையை கட்டவிழ்த்து விட்டது.

தன் மேல் விழுகிற மண்ணை உடலைக் குலுக்கி உதறியது. அவ்வளவு தான் அத்தனை மண்ணும் அதன் காலுக்கு கீழ். இப்படியே எல்லா மண்ணையும் காலின் கீழ் கொண்டு வந்தது. குழியில் மண் உயர தன் முழு பலத்தையும் பயன்படுத்தி ஒரே பாய்ச்சலாக குழியை விட்டு வெளியே வந்தது.

நீங்கள் குழியில் தள்ளப்பட்டு விட்டீர்களா? உங்களை மூட மண்ணைக் கொட்டுகிறார்களா? மன்னவன் இயேசுவுக்குள் திடப்படுங்கள். வேதனையை சோதனை என்று எண்ணாமல், சாதனை புரிய எண்ணி நாதனை நம்புங்கள்.

## 14. எல்லாம் திரும்ப வரும் :

இது பல ஆண்டுகளுக்கு முன்பாக நடந்தது. கிறிஸ்துவை அதிகமாக விசுவாசிக்கும் ஒருவர் திடீரென வந்த வெள்ளப்பெருக்கால் தனது வீட்டையும், மாவுமில்லையும் இழந்துவிட்டார்.

தனக்கு ஏன் இப்படி மற்றவர்களைப் போல் சம்பவித்தது என மனதில் குமுறிக் கொண்டிருந்தார். இடிந்து சிதறலடைந்த தனது வீட்டின் இடிபாடுகளை ஒருநாள் கண்ணீரோடு வந்து பார்வையிட்டார். அந்த இடிபாடுகளின் நடுவே விநோதமான பொருள் ஒன்று தெரிந்தது. ஓடிப்போய் அதை எடுத்தார். அதுவோ பல லட்சம் மதிப்புள்ள தங்கத்தினால் ஆனது. அவ்வளவுதான் ஒரே நிமிடத்தில் பல லட்சங்களுக்கு அதிபதியானார்.

எந்த வெள்ளம் அவருக்கு அழிவை கொண்டு வந்ததோ, அதுவே அவர்களுக்கு ஆஸ்தியையும் கொடுத்து விட்டது.

உங்களுக்கு வரும் அழிவைக் குறித்து கவலைப்படாதீர். அதற்குப்பின் பெரிய ஆசிர்வாதத்தை கொண்டு வருவதற்கு தேவன் வல்லவர்.

உபத்திரவத்திலே பொறுமையாய் இருங்கள்!

சந்தோஷமாய் இருங்கள்!!



## 15. பாதாளத்தில் படுவேதனை :

சோவியத் யூனியனைச் சேர்ந்த புவியியல் ஆராய்ச்சியாளர்கள் பல வருடங்களாக மக்கள் குடியில்லாத சைபீரியா பாலைவனத்தில் ஓர் அதிசய ஆராய்ச்சி நடத்தினார்கள். பூமியின் மேல் பகுதியிலிருந்து செங்குத்தாக விசேஷ துளைபோடும் கருவியால் பூமிக்குள் துளைப்போட்டுக் கொண்டிருந்தார்கள். பல மைல் ஆழம் சென்றதும் அங்கு ஒரு அதிசயம் அவர்களுக்காக காத்திருந்தது. என்னவென்றால் திடீரென்று அந்தக்கருவி வேகமாக சுழல ஆரம்பித்தது! தொடர்ந்து ஆராய்ச்சியின் மூலம் பூமிக்குள் வெற்றிடம் இருப்பதாகவும் அங்கு வெளிப்படும் வெப்பம் 2000 டிகிரி பாரன்ஹீட்டுக்கு மேல் இருப்பதாகவும் கண்டார்கள்.

துளைபோடும்போது ஏற்படும் அதிர்வுகளைக் கண்டறிய விசேஷித்த மைக்குகள் 'Drilling' கருவிகள் பொருத்தப்பட்டு இருந்தன. அந்த மைக்குகள் வழியாக கடைசியாக கேட்ட பயங்கர சப்தம் மனித குரலுக்குச் சரியாக ஒத்திருந்தது.

அது அநேக மனிதர்களின் வேதனையின் அலறல் சத்தம் என்று கண்டுபிடித்தனர். இச்சத்தத்தை கேட்டபிறகு அவ்வாராய்ச்சியில் ஈடுபட்டிருந்த அநேக விஞ்ஞானிகள் பயந்துபோய் தங்கள் வேலையை ராஜினாமா செய்துவிட்டார்கள்.

அந்த ஆராய்ச்சிக் குழுவின் தலைவர் Dr. அஸ்ஸகோவ் என்ற ரஷ்ய விஞ்ஞானி இந்த

உண்மைகளை அவர் ஐரோப்பாவில் உள்ள பல பத்திரிக்கை நிருபர்களுக்கு அளித்த தமது பேட்டியில் கூறியிருக்கிறார். மேலும் அவர் அந்த துளையின் வழியாக பெருஞ்சூளையின் புகை எழும்பி அதிலிருந்து அருவருக்கத்தக்க கண்களையுடைய ஓர் ஜீவராசி மகா சத்தமிட்டு கத்திப் பறந்து மறைந்து விட்டது என்கிறார்.

இவற்றைக் கண்ட பிறகு சோவியத் நாட்டின் தலைமை விஞ்ஞானியாக அஸ்ஸகோவ் "நான் ஒரு கம்யூனிஸ்டானதால் மோட்சத்தையோ சத்திய வேதத்தையோ என்றுமே நம்புவதில்லை. ஆனால் இப்பொழுது நரகம் இருப்பதை முழுக்க முழுக்க நம்புகிறேன்" என்று கூறியிருக்கிறார்.

## 16. கொஞ்சம் கொஞ்சமாய் கொல்லும் :

ஒரு கல்லூரியில் ஒரு பேராசிரியர் நடத்திக் காட்டிய இந்த ஆய்வை கவனியுங்கள். உயிருள்ள ஒரு தவளையை ஒரு பாத்திரத்தில் கொதிக்கும் தண்ணீரில் தூக்கிப் போட்டார். அவ்வளவு தான் அந்த தவளை சூடு தாங்காமல் ஒரே நொடியில் ஒரே ஜம்பில் வெளியே வந்துவிட்டது.

அடுத்து இந்த பேராசிரியர் என்ன செய்தார் தெரியுமா? அந்த தவளையை பிடித்து சாதாரண தண்ணீருள்ள பாத்திரத்தில் போட்டார். அந்த தவளைக்கு ஒரே சந்தோஷம். பாத்திரத்திலேயே நீச்சல் அடிக்க ஆரம்பித்தது. அந்த பாத்திரத்தை அப்படியே அடுப்பின்



மேல் வைத்து சூடாக்க ஆரம்பித்தார். தண்ணீர் இளஞ்சூடான போது தவளைக்கு இதமாய் இருந்தது. வெளியே வர மனமில்லை. தண்ணீர் சூடான போதோ வெளியே வர மனமிருந்தும் முயற்சித்தும் முடியவில்லை.

இவ்வளவு நேரம் நீச்சலடித்ததினால் களைத்து எல்லா பெலனையும் இழந்து போனது தான் காரணம். அந்தோ! அது செத்தே போனது. வாலிப தம்பி, தங்காய்! சாத்தானும் அப்படிதான். நீ பாவத்தில் விழுந்தால் வெளியே வந்து விடுவாய் என்று அவனுக்கு தெரியும். நீ கொஞ்சம் கொஞ்சமாக பின்மாற சுகமான வழியை தந்து உன்னை அழிக்க வருவான் எச்சரிக்கை.

## 17. அவரே சொல்லி விட்டார் :

ஒரு முறை நெப்போலியன் குதிரையின் மேல் பயிற்சி சவாரி செய்து கொண்டிருந்தார். அன்று குதிரை வித்தியாசமாக நடந்து கொண்டது. முன்னங்காலை உயர்த்திக்கொண்டு முரண்டு பண்ணியது. நெப்போலியனுக்கு சற்று அச்சம் ஏற்படவே அதன் கழுத்தை கெட்டியாக பிடித்துக் கொண்டார்.

இதை கண்ணுற்ற சிப்பாய் ஒருவர் ஓடிவந்து குதிரையை லாவகமாக தட்டிக் கொடுத்தான். என்ன ஆச்சரியம்! குதிரை இயல்பான நிலைக்கு திரும்பிவிட்டது.

நன்றி பெருக்கினால் நெப்போலியன், "கேப்டன் மிக்க நன்றி" என்று சொல்லிவிட்டு புறப்பட்டார். சாதாரண சிப்பாயாகிய தன்னை, நெப்போலியன் கேப்டன் என்று சொன்னதை அவர் முழுமையாக நம்பினார்.

சிப்பாய்க்குரிய உடைகளை கலைந்து விட்டு கேப்டனுக்கு உரிய உடைகளை அணிந்து கொண்டார். உணவு அருந்த கேப்டன்கள் பகுதிக்குச் சென்றார்.

இதனை கண்ணுற்ற மற்ற கேப்டன்கள், ஆ! சிப்பாயாகிய நீ கேப்டன் உணவு விடுதிக்கு வருவதற்கு யார் அனுமதித்தது? என்றனர்.

இவரோ, நெப்போலியனே என்னை கேப்டன் என்று சொல்லி விட்ட பிறகு யாருடைய அனுமதியோ, அங்கீகாரமோ எனக்கு அவசியமில்லை என்று ஓங்கி பதில் உரைத்தார்.

பிரியமானவர்களே! கர்த்தர் உங்களை ஊழியத்திற்கு அழைத்தால் அதை விசுவாசித்து செயல்பட துவங்குங்கள்.

## 18. நான் பெரிய அதிபதியுடன் பேசுகிறேன் :

உலக பிரசித்தி பெற்ற தேவ ஊழியர் பால்யாங்கி சோவின் வாழ்க்கையில் நடந்த சம்பவம் இது. அவர் ஒருநாள் அதிகாலை நேரத்தில் ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தார். அப்போது ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. அடுத்த முனையில் யார் தெரியுமா? கொரிய நாட்டுத் தலைவரின் மனைவி, பாஸ்டர் சோவிடம் பேச வேண்டுமென்றிருந்தார்கள். ஆனால் பாஸ்டரின் செயலரோ அவர் முக்கியமான வேளையில் இருப்பதாகவும் தற்போது அவரை பார்க்க முடியாது எனவும் கூறினார்.



அவ்வளவு தான் ஜனாதிபதியின் மனைவிக்கு மிகுந்த கோபம். இந்த செயலரை மாற்ற வேண்டுமென்று பாஸ்டர் சோவிடம் கூறினார்கள். அவரோ, சிரித்துக் கொண்டு, அந்த செயலர் செய்தது சரிதான். ஏனெனில் நான் பரலோக தேவனோடு பேசும்பொழுது எந்த நாட்டு அதிபதியும் அதில் குறுக்கிட முடியாது என்று கூறிவிட்டார். ஜெபம் எத்துனை முக்கியமானது என்ற அறிவுதான் இதற்கு காரணம்.

## 19. கிருபையை போக்கடித்தவன் :

தமிழக காவல்துறையும் இந்திய இராணுவத்துறையும் அதிரப்பண்ணி, கலங்கப் பண்ணினவன் பிரபல சந்தனக்கடத்தல் வீரப்பன்.

அவன் எத்தனையோ கொலைகளையும், கொள்ளைகளையும் செய்திருந்த போதும், ‘‘காட்டை விட்டு வெளியே வா, உனக்கு மன்னிப்பு வழங்குகிறோம். நீ சமுதாயத்தில் மனிதனாக வாழ்வதற்கு அரசாங்கம் சார்பில் உரிய வழி செய்கிறோம்’’ என்று அப்போதைய முதல்வர் திரு. கருணாநிதி அழைப்பு கொடுத்தார். ஆனால் வீரப்பனோ, அதை ஏற்க மறுத்து விட்டான்.

ஆனால் முடிவு என்னவாயிற்று தெரியுமா? ஆட்சி மாறியது. மன்னிப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை என்று சொல்லி தேடுதல் வேட்டையை தீவிரமாக்கியது. வீரப்பனும் அவன் கூட்டாளிகளும் பிணமாக்கப்பட்டு வெளியே கொண்டு வரப்பட்டார்கள்.

பிரியமானவர்களே!

மன்னிப்பை ஏற்றிருந்தால் மனிதனாக வாழ வாய்ப்பு கிடைத்திருக்கும். என்ன பரிதாபம்! தனக்கு இருந்த பலத்தின் மீது நம்பிக்கை வைத்து தனக்கு வந்த கிருபையை இழந்தான். வாழ்வையும் இழந்தான்.

ஆம்! மாயையை பின்பற்றுகிறவர்கள் தங்களுக்குள்ள கிருபையை போக்கடிக்கிறார்கள்.

## 20. இன்று நாய் நாளை நாமா :

நான் சுவிட்சர்லாந் தேசத்திற்கு சென்ற போது அங்கே என் நண்பர்கள் சொன்ன செய்தி மிகுந்த ஆச்சரியமாய் இருந்தது. அந்த தேசத்தில் உள்ளவர்கள் நாய்களை தங்கள் செல்லப்பிராணியாக வளர்ப்பதில் மிகுந்த அக்கறை கொள்கிறார்கள். இப்படிப்பட்ட நாய் வளர்ப்பால் காவல்துறைக்கு படுடென்ஷன்.

இங்குள்ள நாய் அடிக்கடி காணாமல் போகிறது, "எங்கள் நாய்களை கண்டுபிடித்து தாருங்கள்" என்று ஏகப்பட்ட கடிதங்கள் காவல்துறைக்கு வருவதால் அவர்கள் நாய்களைத் தேட நாயாய் அலைகிறார்கள்.

இதற்கு முற்றுப் புள்ளி வைக்க ஒரு புதிய யுக்தியை கண்டுபிடித்திருக்கிறார்கள். ஒரு நாயின் சகல விவரங்கள் அடங்கிய சிறிய மைக்ரோ சிப்பை அந்த நாயின் உடலுக்குள் வைத்து தைத்து விடுகிறார்கள். நாயின் நடமாட்டத்தை செயற்கைக் கோள் மூலம் கண்காணிக்கிறார்கள். நாய் காணாமல் போனால் அடுத்த மணி நேரத்திலேயே பிடித்து விடுவார்கள்.



இப்போது நாய்க்கு, இந்த System மனிதர்க்கும் சீக்கிரம் வரப்போகிறது. அப்படி வந்துவிட்டால் அந்திகிறிஸ்துவின் கண்களுக்கு யாருமே தப்ப முடியாது.

## 21. சாவைத் தடுத்த செல் :

இது ஒரு ருசியான தகவல். ஒரு வாலிபன் ஏதோ ஒரு விரக்தியினால் தற்கொலை செய்ய முடிவெடுத்தான். சாவதற்கு முன்பாக தன் நண்பனுக்கெல்லாம் சொல்ல வேண்டுமென்று எண்ணி, தகவல் கொடுக்க விரும்பி பலர்க்கும் SMS செய்தியை செல்போன் மூலம் கொடுத்தான்.

நடந்தது என்ன தெரியுமா? இவர் அனுப்பிய செய்தி தவறுதலாக சம்பந்தம் இல்லாத நபர்க்கு போய்விட்டது. அது ஒரு கிறிஸ்தவ பெண்ணுக்கு சொந்தமான செல்போன். அவர் அந்த செய்தியைப் படித்து அலட்சியப்படுத்த விரும்பவில்லை. உனக்கு ஜீவன் உண்டாக்க இயேசு மரித்தார். நீ சாகத் தேவையில்லை. சாவை கைவிடு என்று மறுசெய்தி கொடுத்தார்.

இது வாசித்த இவருக்கு அதிர்ச்சி ஒருபக்கம், ஆச்சரியம் ஒரு பக்கம். அதே நேரத்தில் ஆழ்ந்து யோசிக்க ஆரம்பித்தார். தனது முடிவை மாற்றிக் கொண்டார். சேதி அனுப்பினவரோடு தொலைபேசியில் நேரடியாக பேசினான். இன்னும் இயேசுவைப் பற்றி அறிந்து கொண்டான். இயேசுவை நம்புகிறவனாக மாறினான்.

பார்த்தீர்களா? ஒருவனை மீட்க தேவனுக்கு சித்தமானால் எந்த வகையிலும் பேசுவார் என்பதும் நாம் சொல்லுகிற சிறு வார்த்தையும் கூட அநேகரை சாவிலிருந்து காப்பாற்றும் என்பதும் உண்மை.

## 22. குடிக்காதே ஊற்றிவிடு :

ஒரு தூர தேசப்பயணி வனாந்தர மார்க்கமாய் நடந்து போய்க் கொண்டிருந்தான். மிகுந்த தாகம். எங்கு தேடியும் தண்ணீர் கிடைக்கவில்லை. மிகவும் களைத்துப் போனான்.

நாவரண்டு செத்துப் போய் விடுவோமோ என்று அஞ்சின நேரத்தில் அவருக்கு ஒரு இன்ப அதிர்ச்சி. சற்று தூரத்தில் தண்ணீர் அடிபம்பும் அதன்மேல் தண்ணீர் நிரப்பப்பட்ட பாட்டிலையும் கண்டார். ஆஹா, பிழைத்தோம் என்று ஆசையோடு அதன் அருகே நெருங்கினார். அங்கே அவருக்கு இன்னொரு அதிர்ச்சி, "இந்தத் தண்ணீரைக் குடிக்காதே, அப்படியே பம்பில் ஊற்றி, பம்பை அடியுங்கள்" என்று எழுதப்பட்டிருந்தது.

இவருக்கு ஏகப்பட்ட குழப்பம். தண்ணீரைக் குடித்துவிட்டு போய்விடலாமா? அல்லது ஊற்றி பம்பை அடிக்கலாமா? ஊற்றினால் தண்ணீர் வருமா? இப்படி பல கேள்விகள் உள்ளத்தில் எழும்பினாலும், முடிவில் பம்பில் தண்ணீரை ஊற்றி அடித்தார்.

என்ன ஆச்சரியம்! தண்ணீர் பீறிட்டுக் கொண்டு வந்தது. குடித்தார் – குளித்தார் – மனம் குளிர்ந்தார் – குதூகலித்தார்.

பிரியமானவர்களே, உங்கள் கையில் இருப்பதை



நீங்கள் புசித்தால் ஒருவேளை மாத்திரம் சாப்பிட முடியும். அதுவும் அளவாகத் தான். ஆனால் அதை தேவ ராஜ்ஜியத்திற்கென்று விதைத்தால் நீங்களும் புசிக்கலாம். உங்கள் வீட்டாரும் புசிக்கலாம். கொடுங்கள் அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும்.

## 23. இந்த கைக்கும் கொடுங்கள் :

சமூக சேவகி ஒருவர் இருந்தார். பெரும் பணக்காரர்களை சந்தித்து, தன் பராமரிப்பில் உள்ள அநாதைச் சிறுவர்களுக்காக உதவிகளைக் கேட்பது அவருக்கு வழக்கம்.

இப்படித்தான் ஒருமுறை, ஒரு பணக்காரரை சந்தித்து, "ஐயா, எனது இல்லத்தில் உள்ள சிறுபிள்ளைகளுக்கு ஏதாகிலும் கொடுத்து உதவுங்கள்" என்று தன் இருகைகளையும் நீட்டினார்.

அந்தப் பணச்செருக்குப் பிடித்த மனிதன் இவரை அலட்சியமாகப் பார்த்தார். இவரது எளிமையான தோற்றம் அவருக்கு எப்படித் தெரிந்ததோ, திடீரென்று தன் வாயில் மென்று கொண்டிருந்த வெற்றிலையை 'பச்' என்று இந்த சமூக சேவகியின் இடக்கையில் துப்பினார். சுற்றியிருந்தவர்கள் எல்லாம் ஏளனமாய் சிரித்தனர்.

இந்த தாய் கோபப்படாமல் மிகுந்த சாந்தத்தோடு, "ஐயா, எனது இடதுகைக்கு கொடுத்ததற்காக நன்றி, என் வலதுகைக்கும் ஏதாவது கொடுங்கள்" என்று தன் வலக்கையை நீட்டினார். அவ்வளவுதான்! அந்த மனிதர் ஆடிப்போனார். அதுமட்டுமா, உள்ளம் அசைந்தார். அப்பொழுதே மனம் மாறினார். தனது செயலுக்காக

வருத்தம் தெரிவித்தது மாத்திரமல்ல, அந்தத் தொண்டு நிறுவனத்திற்கு நல்ல உதவியும் செய்தார்.

அன்னை தெரசா தான் அந்த சமூக சேவகி. அவர் உள்ளத்தில் நிறைந்திருந்த கிறிஸ்துவின் அன்பு அவர்களை அப்படி செயல்பட வைத்தது. அந்தக் கனிவும், பணிவும், துணிவும் நமக்குள் இருந்தால் கற்களையும் நம்மால் கறைய வைக்க முடியும்.

## 24. தோற்றத்தின்படி தீர்ப்பு செய்யாதீர் :

ஒரு குடும்பம் அந்தப் பட்டணத்திற்கு புதிதாய் வந்திருந்தார்கள். சபைக்குப் போக வேண்டுமே என்று மிகவும் கஷ்டப்பட்டு ஒரு சபையைக் கண்டுபிடித்தனர். ஞாயிற்றுக் கிழமை முதன்முறையாக அந்த சபைக்குச் சென்றனர். ஆராதனையில் மிக உற்சாகமாக இருந்த அவர்கள் பிரசங்கத்தின் பாதியிலேயே எழுந்து போய்விட்டார்கள். அதன் பிறகு அந்த சபைக்கு வரவேயில்லை.

இரண்டு மூன்று மாதங்களுக்குப் பின்னர், அந்தக் குறிப்பிட்ட சகோதரனை பாஸ்டர் வெளியிலே சந்தித்தார், “அன்று பாதியிலே எழுந்து போய் விட்டீர்களே, ஏதாகிலும் அவசர வேலையா?” என்று கேட்டார்.

“அப்படி ஒன்றும் அவசரமான வேலை இல்லை. உங்கள் ஆராதனை எல்லாம் எங்களுக்குப் பிடித்திருந்தது. ஆனால் பிரசங்கத்தின் போது உங்கள் மொழிபெயர்ப்பாளர், காலில் ‘ஷு’ அணிந்து கொண்டு



பிரசங்க மேடையில் நின்றதை என்னால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. அதனால் தான் போய்விட்டோம்” என்றார்.

பாஸ்டர் கண்ணீருடன் சொன்னார், “சகோதரரே, அவர் காலுக்கு ஷு போடவில்லை. அது ஷுவே தான். அவருக்கு கால் விபத்து ஒன்றில் தன் காலை இழந்த அவர், கர்த்தருக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் செயற்கைக் காலைப் பொருத்திக் கொண்டு வேதனையை சகித்துக் கொண்டு மனமகிழ்ச்சியோடே மணிக்கணக்கில் மொழி பெயர்க்கிறார்”

கேட்டவர் அதிர்ந்து போனார். வெட்கத்தால் தலை குனிந்தார். யோவான் 7 : 24ன் படி தோற்றத்தின்படி தீர்ப்பு செய்யாதிருங்கள். ஒவ்வொருவருடைய செயலுக்குப் பின்னும் ஒரு உண்மை பொதிந்திருக்கும். அதைப் புரிந்து கொள்ளாமல் உங்கள் இஷ்டப்படி தீர்ப்பு செய்யாதிருங்கள்.

## 25. தட்டாமலே திறக்கும் :

வெளிநாடு ஒன்றுக்கு வேலை தேடிச் சென்ற ஒருவர்க்கு ஒரு மிகப்பெரிய கம்பெனியில் இருந்து அழைப்புக்கடிதம் வந்தது. அந்தக் கடிதத்தை எடுத்துக்கொண்டு, அந்தக் கம்பெனிக்குச் சென்ற அவரை உள்ளே செல்ல அனுமதித்த வாயிற்காவலன் ஒரு குறிப்பிட்ட கட்டிடத்தைக் காண்பித்து, அதுதான் நீங்கள் செல்ல வேண்டிய இடம் என்று வழிகாட்டினார்.

கட்டிடத்திற்கு சற்று தூரம் வந்து நின்று கொண்ட அவர் குழம்பிப்போனார். காரணம், அந்த வாசலில்

காவலர் யாருமில்லை. கண்ணாடித் தடுப்பு இருந்தது. ஆனால் இழுப்பதற்கோ, தள்ளுவதற்கோ பிடி ஏதுமில்லை. எப்படி உள்ளே செல்வதென்று தெரியாமல், வாசலுக்குப் பத்து அடி தூரத்தில் நின்று கொண்டார். அப்பொழுது வேகமாக ஒரு மனிதர் வந்தார். அவர் கதவை எப்படித் திறக்கிறார் என்று இவர் கவனித்தார். இவர் கவனிப்பதற்குள் கதவைத் திறந்து அவர் போய்விட்டார். ‘‘ஓஹோ! இவர் இந்தக் கம்பெனி அலுவலர் ரிமோட் மூலம் திறந்து விட்டார். நாம் என்ன செய்வது?’’ என்று ஏக்கத்துடன் அங்கே நின்று கொண்டார். இப்படி இரண்டு மூன்று பேர் வந்து போய்விட்டார்கள்.

இவருக்குக் குறிக்கப்பட்ட நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது, ‘‘ரிமோட் இல்லையென்றால் என்ன கதவைத் தட்டுவோம் உள்ளேயிருந்து யாராவது திறப்பார்கள்’’ என்று எண்ணிக் கொண்டு வேகமாய் கதவை நெருங்கினார். என்ன ஆச்சரியம், கதவு தானாய் திறந்து கொண்டது. அப்போது தான் அவருக்கு தெரிந்தது. அது தானாய்த் திறக்கும் கதவு என்று.

பிரியமானவர்களே, இரட்சிப்பும் இப்படித்தான், நீங்கள் கிறிஸ்துவை நெருங்கி வந்தால் இரட்சிப்பின் பாதைத் தானாய் திறக்கும் விசுவாசத்துடன் காலை முன்னே வையுங்கள்.

## 26. முழங்கால் யுத்தம் :

முரட்டாட்டமுள்ள செவ்விந்தியர்கள் உள்ள அடர்ந்த காட்டுப்பகுதிக்கு அந்த மிஷனரி சென்றார். அப்பகுதி மக்களைக் குறித்து அவருக்கு நன்றாகவே



தெரியும். எனினும் அவர்களை நெருங்க முடியும், சுவிஷேசத்தை அவர்களுக்குச் சொல்ல முடியும் என்று அவர் திடமாக நம்பினார்.

உண்மையில் அவர்களை யாராலும் நெருங்க முடியாது. காரணம், வேற்று மனிதர்களை கண்டால் விஷ அம்புகள் எய்து கொன்று விடுவார்கள். சில வேளைகளில் தின்று விடுவார்கள்.

துணிந்து சென்ற இவர், அவர்களைச் சந்திப்பதற்கு முன் அந்த அடர்ந்த காட்டிற்குள் முழங்காலில் நின்று ஜெபிக்க ஆரம்பித்தார். அந்தப்பக்கம் வேட்டைக்கு வந்தவர்கள் இக்காட்சியை சற்று தூரத்திலே கண்டுவிட்டனர். அவ்வளவுதான். அம்பு எய்து கொல்ல ஆயத்தமாயினர். ஆனால் கொல்லவில்லை.

‘‘இவனை நாம் கொல்லத் தேவையில்லை, கொஞ்ச நேரத்தில் அவன் செத்துப்போவான்’’ என்று கோரசாக சொன்னார்கள்.

காரணம் என்ன தெரியுமா? முழங்காலில் நின்று கொண்டிருந்த மிஷனரி முகத்திற்கு நேர்எதிரே இருக்கும்படி தன் தலையை உயர்த்தி படமெடுத்து நின்று கொண்டிருந்தது ஒரு நாகம்.

நடந்தது என்ன தெரியுமா? அவன் எப்படி சாகிறான் என்பதைப் பார்க்க ஆவலாய்க் காத்திருந்த அந்த மக்கள் தங்கள் கண்களையே நம்பமுடியாமல் நின்றனர்.

படமெடுத்த பாம்பு கொத்தப் போகிறது என்று இவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த நேரத்தில் சில நிமிடங்களுக்குப் பிறகு தலையைக் கீழே போட்டு கொண்டு வந்த வழியே திரும்பிப் போய் விட்டது.

இந்தக் காட்சியைக் கண்ட அவர்கள் இவர் மனிதர் அல்ல. கடவுளின் பிரதிநிதி என்று எண்ணி நெருங்கி வந்து காலில் விழுந்தனர். இத்தனை காரியங்களையும் அறியாமல் ஜெபித்துக் கொண்டிருந்த அவர் கண்களை விரித்து அவர்களுக்கு நற்செய்தியை அறிவித்து கிறிஸ்துவுக்குள் நடத்தினார்.

இது ஜெப வீரனாகிய டேவிட் பிரனால்டு என்ற மிஷனெரியின் வாழ்வில் நடந்த உண்மைச் சம்பவம். ஜெபம் எல்லாவற்றையும் ஜெயிக்கும் என்பதை அறிந்து எல்லாவற்றிற்காகவும் ஜெபியுங்கள்.

## 27. மாறியது நெஞ்சம் :

இது கேரளத்துக் கதை. புதிதாய் திருமணமான மனைவி தன் கணவனிடம் பூவன் வாழைப்பழம் வேண்டுமென்று விரும்பி கேட்டாள். அது ராத்திரி நேரம். தன் மனைவியின் வாஞ்சையை நிறைவேற்ற கணவன் புறப்பட்டு சென்றான். கடைகளெல்லாம் மூடத் தொடங்கி விட்டன. பழம் எங்குமே கிடைக்கவில்லை. தன் மனைவி ஏமாந்து போய் விடுவாளோ, வாழைப்பழம் இல்லாவிட்டால் என்ன, ஆரஞ்சாவது வாங்கிச் செல்வோம் என்று ஆசையாய் வாங்கிச் சென்றான்.

அவ்வளவுதான். ஒரு வாழைப்பழத்தை வாங்கித்தர உனக்கு அம்சமில்லை. எப்படி உன்னோடு வாழ்க்கை நடத்தப் போகிறேன் என்று மாபெரும் பிரச்சனை எழுப்பி, கூக்குரலிட ஆரம்பித்தாள்.

எப்படியோ, ஐம்பது ஆண்டுகள் கடந்துவிட்டது. கிழத்தம்பதிகளாய் வாசலில் உட்கார்ந்து



கொண்டிருந்தனர். அந்த அம்மா ஆரஞ்சுப்பழத்தை உரித்து சுவைத்துக் கொண்டிருந்தாள். அந்த வழியாய் வந்த ஒருவர், பாட்டி என்ன சாப்பிடுகிறீர்கள்? என்று கேட்டார். பாட்டி நிதானமாகச் சொன்னாள், “நான் பூவன் வாழைப்பழம் சாப்பிடுகிறேன்.”

உங்களுக்கு ஏதாவது புரிகிறதா? இல்லாத ஒன்றை விரும்பி பிரச்சனை உண்டாக்குவதை விட, கிடைத்ததையே தான் விரும்பியதாக எண்ணுகிற புதிய மாற்றத்தைப் பெற்றுக்கொண்டாள். அதனால் தான் ஐம்பது ஆண்டுகாலம் குடும்பத்தை நடத்த முடிந்தது.

## 28. ஒன்று பட்டால்......

கடற்கரை ஓரத்தில் கட்டப்பட்டிருந்த தேவாலயத்தின் உச்சியிலிருந்த மணி திடீரென்று வந்த புயலின் சீற்றத்தினால் கடலுக்குள் விழுந்துவிட்டது. அலையின் மும்முரத்தினால் உடனே அதை எடுக்க தவறி விட்டனர். அலையின் வீச்சினால் அந்த ஆலயமணி நகர்ந்து ஆழத்திற்குச் சென்றுவிட்டது.

மிகுந்த எடையுள்ள அந்த ஆலயமணியை வெளியே கொண்டுவர முயற்சித்தபோது அது கூடாத காரியமாய்ப் போயிற்று. இப்பொழுதிருக்கிற நவீன வசதிகள் அப்போது இல்லை.

ஆனால் என்ன செய்தார்கள் தெரியுமா? மிக நீண்ட மூங்கில் கழிகள் பலவற்றைக் கொண்டு வந்தனர். சிலர் சேர்ந்து கொண்டு ஒவ்வொரு கழிகளாய் தண்ணீருக்குள் அழுத்திச் சென்று மூழ்கிப்போன மணியின் வளையத்தில் கட்டிவிட்டனர். இப்படிப்பல

மூங்கில்களைக் கட்டக் கட்ட அவர்கள் எதிர்பார்த்தது நடந்தது. அத்தனை பாரமுள்ள அந்த மணியைத் தூக்கிக் கொண்டு மூங்கில்கள் மிதக்க ஆரம்பித்து விட்டன. அந்தத் தெப்பத்தை கரைக்கிழுத்து, மணியை லகுவாக மீட்டு விட்டனர்.

அரிய காரியங்களில் உங்களுக்கு வெற்றி கிடைக்கவில்லையா? பலர் ஒன்று சேர்ந்து ஒருமனப்பட்டு ஜெபிப்போம். எப்பேர்ப்பட்ட காரியமானாலும் அது சாத்தியமாகும்.

## 29. ஒரிஜனல் & டூப்ளிகேட் :

தேவனுக்கு அடுத்தவைகளைப் போலவே தன்னையும் காட்டிக் கொள்வதில் பிசாசு மிகுந்த அக்கறையுள்ளவன். இந்த செயலை வேதமும் அழுத்தமாக கோடிட்டுக் காட்டுகிறது என்பதை கவனித்துப் பாருங்கள். தேவகுமாரன் இயேசுகிறிஸ்து என்றழைக்கப்படுவது போல, பிசாசின் மகன் அந்திக்கிறிஸ்து என்று அழைக்கப்படுகிறான்.

இயேசு யூதராஜ சிங்கமானால் பிசாசு கெர்ச்சிக்கிற சிங்கம் போல வருவானென்று வேதம் சொல்கிறது.

இயேசு விடிவெள்ளி நட்சத்திரமானால் பிசாசு அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளியே என்று வேதம் கூறுகிறது. நமது தேவன் பறந்து காக்கிற கழுகைப்போல் இருக்கிறது போல சத்துரு கழுகைப்போல் பறந்து வருகிறான் என்று வேதம் சொல்கிறது.

இயேசு உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற



தேவ ஆட்டுக்குட்டியானால் அந்திக்கிறிஸ்துவை ஆட்டுக்கடா என்று வேதம் சொல்கிறது.

இப்படி அநேக டூப்ளிகேட்டுகளை வேதம் முழுவதும் நீங்கள் காணலாம். உங்கள் கனவில் சிங்கம், கழுகு, ஆடு வந்தால் இயேசு வந்துவிட்டார் என்றோ, பிசாசு வந்து விட்டான் என்றோ புலம்பாதீர்கள். வேத வசனத்தை ஒழுங்காய்ப் படித்து போலிகளை கண்டுபிடியுங்கள்.

## 30. பொருத்தமில்லாத பெயர் :

என் பள்ளி பருவத்தில் எனக்கிருந்த அறிவியல் ஆசிரியரை என்னால் மறக்க இயலாது. வீட்டுப்பாடங்களை முடித்து வராத காரணத்தினால் வகுப்பறையில் நிற்க வைத்து பலமுறை என்னைத் திட்டி தீர்த்திருக்கிறார். இன்றும் என் நினைவில் இருக்கிறது.

நொண்டிக்குப்பேர் நடராஜன், முடவனுக்குப் பெயர் தாண்டவராயன், கஞ்சனுக்குப் பெயர் தயாளன்? முட்டாளுக்குப் பெயர் அறிவழகன், கருப்பனுக்குப் பெயர் வெள்ளைச்சாமி எப்படிப் பொருந்தாதோ, அப்படியே உனக்கும் பேர் பொருந்தாது (அப்போது).

இதை நான் எழுதுவதற்கு காரணம் உண்டு. வேதத்தில் பொதுவாக, ஆளுக்கும், பெயருக்கும் சம்பந்தம் உண்டு. ஆனால் பேருக்கும் செயலுக்கும் பொருந்தாத பெயரை உங்களுக்குக் காண்பிக்கப் போகிறேன். **கொலேயா**, இவன் ஒரு தீர்க்கதரிசி இந்தப் பெயருக்கு அர்த்தம் என்ன தெரியுமா? யொகோவாவின் சத்தம் (Voice of jehova).

ஆனால் இவன் என்ன செய்தான் தெரியுமா? (எரேமியா 29 : 21) பொய் தீர்க்கதரிசனம் உரைத்துக் கொண்டிருந்தான்.

பிரியமானவர்களே, இப்படிப் பெயருக்கும், உடைக்கும், ஊழியத்திற்கும் பொருத்தமில்லாத பலர் உலாவி வருகிறார்கள். ஏமாந்து போகாதீர்கள். எச்சரிக்கையாய் இருங்கள்.

## 31. எல்லாம் நன்மைக்கே :

அந்த ஓவியர் தனது வீட்டு மாடியில் ரசனையோடு வரைந்து கொண்டிருந்தார். தான் வரைந்த ஓவியத்தை கொஞ்சம் கொஞ்சமாய் பின்னால் நகர்ந்து கொண்டே ஒவ்வொரு அடிக்கும் அந்த ஓவியத்தை அணுஅணுவாய் ரசித்தார்.

அப்பொழுது வெளியே சென்று தேனீர் வாங்கிக்கொண்டு வந்த அவரது உதவியாளன் மாபெரும் அதிர்ச்சிக்குள்ளானான். காரணம், அந்த ஓவியர் அடுத்த அடி பின்னால் வைத்தால் அந்தக்கணமே அந்த மொட்டை மாடியிலிருந்து கீழே விழுந்து மரித்து விடுவார். என்ன செய்தாலும் அவர் பின்னே நகர்வதை தடுக்க முடியாது என்பதை நன்கு அறிந்த அவன் இதை விட்டால் வேறு வழியில்லை என்று எண்ணி, தான் வாங்கிக்கொண்டு வந்த தேனீரை அப்படியே அந்த படத்தின் மீது ஊற்றி விட்டான்.

அவ்வளவு தான் அந்த ஓவியர் ஒரே பாய்ச்சலாக முன்னாக வந்து அந்த உதவியாளனை ஒரு அறை விட்டார். உதவியாளன் கோபப்படாமல், ஐயா நீங்கள்



நின்று கொண்டிருந்த இடத்தை சற்றுத் திரும்பிப் பாருங்கள். நான் அப்படி செய்யாவிட்டால் உங்கள் ஜீவியமே முடிந்திருக்கும். இப்பொழுது சொல்லுங்கள் எது முக்கியம் ஜீவியமா? ஓவியமா?

பிரியமானவர்களே! இப்படித் தான் நமது வாழ்க்கையிலும் ஆண்டவர் செய்கிறார். நம் ஜீவனைக் காப்பாற்றும்படி வேறுவழியே இல்லாமல் சில நஷ்டங்களை அனுமதிக்கிறார். நாம் அதைப் புரிந்து கொள்ளாமல் முறுமுறுக்கிறோம். தம்மிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு சகலத்தையும் நன்மைக் கேதுவாகவே தேவன் செய்கிறார்.

## 32. எல்லோரையும் பிரியப்படுத்த முடியாது :

ஒரு ஓவியர் அழகான ஒரு ஓவியத்தை வரைந்தார். அதை ஒரு முச்சந்தியில் மக்கள் பார்வைக்கு வைத்து அதன் கீழே, உங்கள் விமர்சனங்களையும், கருத்துக்களையும் இங்கு வைக்கப்பட்டுள்ள நோட்டுப் புத்தகத்தில் எழுதுங்கள் என்று விளம்பரப்படுத்தியிருந்தார்.

மாலையில் வந்து நோட்டுப் புத்தகத்தைப் பார்த்த அவர்க்கு பெரிய அதிர்ச்சி, “கண் சிறியதாய் இருக்கிறது, கண் பெரிதாய் இருக்கிறது, கண் சரியில்லை, மூக்கு சரியில்லை, காது கோணல், வாய் சரியில்லை, பல் பெரிசு, உதடு சிறிது, கை குட்டை, கால் நெட்டை என எல்லா அவயத்தைக் குறித்தும் ஏகப்பட்ட விமர்சனங்கள்.

ஓவியர் என்ன செய்தார் தெரியுமா? உங்கள் விமர்சனத்திற்கு நன்றி. நீங்கள் சொன்னபடி ஓவியத்தைத்திருத்தி கொண்டு வந்து வைக்கிறேன் என்ற விளம்பரத்தை வைத்துவிட்டு, ஓவியத்தை வீட்டிற்கு எடுத்துச் சென்று விட்டார்.

ஒரு வாரம் கழித்து அந்த ஓவியத்தை அதே இடத்தில் வைத்து உங்கள் கருத்தின்படி திருத்தப்பட்ட இந்த ஓவியத்தைக் குறித்து தங்களின் கருத்துக்களை இந்த நோட்டில் எழுதி வைக்கவும் என்ற விளம்பரத்தை வைத்தார்.

மாலையில் வந்து நோட்டுப் புத்தகத்தைப் பார்த்த ஓவியருக்கு மிகுந்த ஆச்சரியம், ''கண் சூப்பர், உதடு என்னே அழகு, காது என்னே கச்சிதம், கைகள் என்னே நேர்த்தி, கால் என்னே அழகு'' என்று அங்குலம் அங்குலமாக ஒவ்வொரு அவயங்களையும் பாராட்டி இருந்தனர். இது தான் மக்கள்.

ஊழியர்களே! மக்கள் சொல்கிறபடியெல்லாம் எல்லாவற்றையும் மாற்றிக் கொண்டிருக்காதீர்கள் ஒன்றும் உருப்படாது. கருத்துக்களை மக்களிடம் கேளுங்கள். ஆனால் கர்த்தர் உங்களுக்கு எதைச் சொன்னாரோ அதைமட்டும் கருத்தாய்ச் செய்ய கவனமாயிருங்கள்.

## 33. பிரச்சனையே இல்லாத குடும்பம் :

அது ஒரு வி.ஐ.பி வீட்டு விஷேசம். தங்கள் திருமண வாழ்வின் பத்தாண்டு நிறைவை ஒட்டி விழா நடந்து கொண்டிருந்தது. விழா நாயகன், ''இந்த பத்து ஆண்டுகளில் எனக்கும் என் மனைவிக்கும் இடையே



ஒரு சிறு பிரச்சனை கூட கிடையாது. ஒரு சிறு வார்த்தை கூட என் மனைவியைப் பார்த்து நான் கடினமாக பேசியதே கிடையாது. அதைப் போலவே என் மனைவியும் நான் வருத்தப்படும்படி பேசியதும் கிடையாது நடந்ததும் கிடையாது'' என்று ஏகமாய் புகழ்ந்து தள்ளினார்.

கூட்டத்திலிருந்த மக்கள் இதைக்கேட்டு பலத்த கரவொலி எழுப்பினர். ஒருவர் மாத்திரம் சலிப்போடு அமர்ந்திருந்தார், ''எனக்கு திருமணமாகி ஐந்தாண்டுகள் ஆகிறது, ஒரு நாளும் சமாதானமில்லை, நரக வாழ்க்கை'' என்று புலம்பிக் கொண்டிருந்த அவர் விழா முடிந்ததும், விழா நாயகனை நோக்கி ஓடி வந்தார், ''சார் பத்தாண்டுகள் பிரச்சனையே இல்லாமல் நீங்களும் உங்களுடைய மனைவியும் எப்படி இருந்தீர்கள்'' என்று கேட்டார்.

''அது ஒன்றும் பெரிய காரியமில்லை. திருமணம் முடிந்த அடுத்த நாள் வெளிநாடு சென்றவன் நேற்று தான் திரும்பி வந்தேன்'' என்று சிரித்துக்கொண்டே பதில் சொன்னார். புலம்பல் ஆசாமி விழி பிதுங்கி நின்றார்.

பிரியமானவர்களே! ஒன்றாய் குடித்தனம் நடத்தும்போது கருத்து வேற்றுமைகள், கசப்புகள் வரத்தான் செய்யும். அதை பெரிது படுத்தக்கூடாது. கதிரவன் மறையும் முன்பு அஃதினை மறந்துவிட்டு காலையில் எழும்பும் போது கனிவாய்ப் பேசிப் பழகுங்கள். உங்கள் குடும்பம் குதுாகலமாய் இருக்கும்.

## 34. பார்த்துப் புகழுங்கள் :

அன்பர் ஒருவர் நீண்ட இடைவெளிக்குப் பிறகு ஆலயத்திற்குச் சென்றார். அன்று போதகர் மிக சிறப்பான பிரசங்கம் செய்தார். கணவன் மனைவி சமாதானமாய் இருப்பதற்கு பல வழிகளை சொல்லிக் கொண்டிருந்தார்.

“குடும்பத்தில் சமாதானம் வேண்டுமா? உங்கள் மனைவியைப் புகழுங்கள். அதுவும் அவர்கள் அழகைப் புகழுங்கள். உடையைப் புகழுங்கள், சமையலைப் புகழுங்கள்” என்று போதகர் போதித்தது அன்பருக்கு மிகவும் பிடித்திருந்தது, “அடடா, இத்தனை நாள் வீணடித்து விட்டோமே, இன்றுமுதல் மனைவியை புகழ வேண்டும்” என்று புதிய தீர்மானத்துடன் வீடு திரும்பினார்.

வீட்டில் என்ன நடந்தது தெரியுமா? மனைவிக்கு சுகமில்லை, கணவன் பசியோடு வீடு திரும்புவாரே என்று எண்ணி முடிந்தவரை சாப்பாடு செய்துவிட்டு, பக்கத்து வீட்டு அம்மாவிடம் சாம்பார் வாங்கி வைத்து விட்டார்.

அன்பர் வீடு திரும்பினார். சாப்பாட்டு மேஜையில் அமர்ந்தார். சாப்பிட ஆரம்பித்தார், உடனே புகழவும் ஆரம்பித்து விட்டார், “பிரமாதம், பிரமாதம், சூப்பர்! சூப்பர்! பேஷ், பேஷ், சாம்பார் நன்னா இருக்கு” என்று நான்ஸ்டாப்பாக புகழ்ந்து கொண்டே போனார்.

புண்ணியவதி பூகம்பமானாள். “ஏனய்யா, மத்தவ செஞ்ச சாம்பார் பேஷாத்தான் இருக்கும்” என்று வசைமாறி பொழிய ஆரம்பித்தார். பாவம் அன்பர் புகழப்போய் புயலுக்குள் சிக்கிக்கொண்டார்.

நண்பர்களே! உங்கள் மனைவிகளைப் புகழுங்கள்.



நல்லதுதான் அதே சமயத்தில் நன்றாக விவரங்களைக் கேட்டு அறிந்து கொண்டு புகழுங்கள்.

## 35. என்னே அன்பு! என்னே ஒற்றுமை!

அந்த தம்பதிகளைக் கண்டு சபையாருக்கு ஏகப்பட்ட வியப்பு. எப்பொழுது ஆராதனைக்கு வந்தாலும் ஒன்றாக வருவார்கள். ஒன்றாக போவார்கள். போதாத குறைக்கு அந்த அம்மா தனது கணவரை கையால் வளைத்துப் பிடித்துக்கொண்டு வாகனத்தில் வருவார், போவார்.

அடிக்கடி இதைக் கண்ணுற்ற ஒருவர் அந்த அம்மாவை நோக்கி, “சகோதரியே, உங்களைப் போல தம்பதிகளை இதுவரை பார்த்ததேயில்லை. யாரைக் குறித்தும் கவலைப்படாமல் உங்கள் கணவரை இறுகப்பற்றிக் கொண்டு வருகிறீர். உங்களுக்குத்தான் உங்கள் கணவர் மேல் எவ்வளவு அன்பு” என்று புகழ்ந்து தள்ளினார்.

இந்தப் புகழ்ச்சியைக் கேட்டு அந்த அம்மா என்ன சொன்னார்கள் தெரியுமா?, “நீங்க வேறங்க, அன்பும் கிடையாது, பாசமும் கிடையாது. எல்லாம் ஒருவித பயம்தான்! இந்தப் பொல்லாத மனுஷன் போகிற வழியில் கீழே தள்ளினாலும் தள்ளி விடுவார். அப்படித் தள்ளினால் அவரையும் சேர்த்து விழச் செய்யத்தான் அவரை இறுகப் பிடித்துக்கொள்கிறேன்” இதைக் கேட்டவர் இந்த பரம இரகசியத்தை அறிந்து கொண்டு

பவ்யமாய் மௌனமாகி விட்டார்.

இன்றைக்கு சபைக்கு வருகிற குடும்பங்கள் இப்படித்தான் – ஊரார் மெச்சிக் கொள்ளத்தக்க ஒற்றுமையாய் இருப்பதுபோல் வெளிச்சம் போடுகிறார்கள். உண்மையில் குடும்ப ஐக்கியமின்றி இரும்பும் களிமண்ணும் சேர்ந்த கலவைப்போல் இருக்கிறார்கள். இந்த நிலை மாற வேண்டும்.

## 36. பாடுபட்டால் பறக்கலாம் :

அந்த சிறுவனுக்கு இலகிய மனம். அன்று அவன் வீட்டு தோட்டத்தில், அவன் கண்ட காட்சி திடுக்கிட வைத்தது. ஒரு கூட்டிலிருந்து வெளியே வருவதற்காக ஒரு வண்ணத்துப்பூச்சி பாடுபட்டு கொண்டிருந்தது. அந்த கூட்டில் சிறிய ஓட்டை போட்டு, அதன் வழியே வரத்துடிக்கும் அந்த அற்ப ஜந்துவைப் பார்த்து இவன் ஆழ்மனது துடிக்க ஆரம்பித்தது.

“பாவம் அந்தப் பட்டாம்பூச்சி. தவியாய் தவிக்கிறது. அந்தக்கூட்டை மெதுவாக இரண்டாகப் பிளந்துவிட்டால் அந்தப் பட்டாம்பூச்சி எவ்வளவு இலகுவாய்ப் பறக்கும்” என்று எண்ணி அந்த கூட்டை இரண்டாகப் பிளந்து விட்டான்.

நடந்தது என்ன தெரியுமா? பட்டாம்பூச்சி பறக்கவில்லை. மாறாக தரையில் விழுந்த அது துடிதுடித்து செத்துப்போனது.

ஏன் தெரியுமா? கூட்டிலிருக்கிற வளர்ச்சி அடைந்த அந்தப் பட்டாம்பூச்சியின் மேல் ஒரு மெல்லிய ஜவ்வு



மூடியிருக்கும். சிறிய ஓட்டையின் வழியாக முயற்சி செய்து கூட்டைவிட்டு வெளியே வருகிறபோது அதை மூடியிருக்கிற ஜவ்வு தானாக வெளியே வரும். அப்பொழுது அது விடுதலையோடு பறக்கும். அந்த சிறுவன் இதை அறியாமல் கூட்டை உடைத்து விட்டதினால் அதை மூடியிருந்த ஜவ்வு உறிந்து வரவில்லை. அதனால் பறக்கமுடியாமல் பதை பதைத்து செத்துப் போனது.

பிரியமானவர்களே! தேவனுடைய சிட்சையை அற்பமாய் எண்ணக்கூடாது. உபத்திரவங்களால் நாம் உருக்குலைந்து போவதில்லை. அவைகளின் வழியே கடந்து வருகிறபோது புதிய விதத்தில் உருவாக்கப்படுகிறோம். எனவே உபத்திரவங்களில் பொறுமையாயிருங்கள். அவைகளின் வழியாய் கடந்து வாருங்கள். உபத்திரவங்களினாலே நம்மைப் பூரணப்படுத்துவது தேவனுடைய திட்டமாயிருக்கிறது.

## 37. அப்பா போட்ட திட்டம் :

போதகராகிய என்னுடைய நண்பர் ஒருவர் திடீரென கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். அவரது பிரிவால் அவரது குடும்பமும், சபையும் மிகுந்த வேதனையடைந்தது. அந்த துயரத்தில் வழக்கமாக நடக்கிற கூட்டங்கள், நிகழ்ச்சிகள் குறைந்தபட்சம் ஒருமாதமாகிலும் நிறுத்தி வைக்கப்படும் என்று பலர் எண்ணினர்.

ஆனால் நடந்தது என்ன தெரியுமா? சில நாட்களுக்குள் எங்கள் பட்டணத்தில் நடந்த மிகப்பெரிய நிகழ்ச்சி ஒன்றில் அந்தப் போதகரின் மகன் தனது சபையாருடன் கலந்து கொண்டு மிகச் சிறப்பாக நிகழ்ச்சி ஒன்றை அளித்தார்.

இதைக் கண்ணுற்ற எங்களுக்கு, இது எப்படி சாத்தியம் என்று மிகப்பெரிய ஆச்சரியமாய் இருந்தது. எனது மகன் துணிந்து, "உங்கள் தந்தை இறந்த பிறகு இவ்வளவு சீக்கிரத்தில் இப்படியொரு நிகழ்ச்சியை எப்படி உங்களால் தர முடிந்தது" என்று கேட்டு விட்டார்.

"உண்மையில் என்னால் முடியாது தான். ஆனால் இது என் அப்பா போட்ட திட்டம். அவர் மரிப்பதற்கு முன்பாக அவரது டைரியில், அடுத்த ஒரு மாதத்திற்கான ஊழியத் திட்டத்தைக் குறித்து வைத்திருந்தார். அதைத்தான் நிறைவேற்றுகிறேன்" என்று பளிச்சென பதில் சொன்னார்.

ஆம், பிரியமானவர்களே, சோதனை வேளைகளில் சுருண்டு, துவண்டு முடங்கிப் போய்விடக்கூடாது. நமது பரமபிதா நமக்குத் தந்திருக்கிற ஊழிய திட்டத்தில் ஒன்றைக்கூட தவிர்க்கவோ, தாமதப்படுத்தவோ கூடாது. மாறாக அதனை அப்படியே செய்து முடிப்பதே வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை.



## 38. திடன் கொள்ளுங்கள் திரும்பப் பெறுவீர்கள் :

அந்த நிகழ்ச்சியைத் தொலைக்காட்சியில் பார்த்துக் கொண்டிருந்த இந்தியர்களுக்கு ஒரே மகிழ்ச்சி. இந்திய வீராங்கனை தடகள போட்டியில் பதக்கம் வென்று விட்டார். அந்தக் காட்சியை பல கோணங்களில் பளிச் பளிச் சென்று தொலைக்காட்சியில் காண்பித்தார்கள். ஆனால் அற்ப நேரத்தில் அந்த மகிழ்ச்சி பறந்து போய் விட்டது. காரணம், ஊக்கமருந்தை உட்கொண்டதால் தான் அந்தப் பதக்கத்தை அவர் வென்றார். அது செல்லாது, என சொல்லி பதக்கத்தைத் திரும்ப பெற்று கொண்டனர்.

வீராங்கனைக்கு மட்டுமல்ல விளையாட்டு உலகில் இந்தியாவுக்கும் மிகப்பெரிய அவமானம் ஏற்பட்டது. அந்த வீராங்கனை தன் உண்மை நிலையை எடுத்துச் சொல்லியும் எடுபடவில்லை.

ஆனால் நடந்தது என்ன தெரியுமா? இந்திய விளையாட்டுத் துறை இதை சும்மா விட்டுவிடவில்லை. மீண்டும் மருத்துவ ஆய்வுகள் நடைபெற்றது. அவர் போதை மருந்தை ஊக்க மருந்தாக உட்கொள்ளவில்லை என்று மருத்துவ ஆய்வுகள் அடித்துச் சொல்லியது. திரும்பப் பறித்துக் கொண்ட பதக்கத்தை அந்த வீராங்கனையிடமே கொடுத்தனர். இந்தியாவில்

மிகப்பெரிய விழா எடுத்து அந்தப் பதக்கத்தை மீண்டும் அந்த வீராங்கனை கழுத்தில் அணிவித்தனர்.

பிரியமானவர்களே, நீங்கள் அநியாயமாய் குற்றப்படுத்தப்பட்டு, உங்கள் உடைமைகளையும், உரிமைகளை இழந்திருக்கலாம். துவண்டு விடாதீர்கள். எல்லாம் முடிந்து விட்டது என்று சோர்ந்து போகாதீர்கள். உங்கள் வழக்கை சரியாய் நியாயந்தீர்க்க கர்த்தர் இருக்கிறார். உங்கள் நீதி அதி சீக்கிரத்தில் வெளிப்படும். உங்கள் வெட்கத்திற்குப் பதிலாக கீர்த்தியைத் தருவார். அந்த நாள் வெகு சமீபம்.

## 39. நீதிச் சங்சிலி :

இந்திய நாட்டை முகலாய அரசர்கள் ஆண்டபொழுது நடைபெற்ற உண்மைச் சம்பவம் இது. முகமது ஜகாங்கிர் ஆட்சிசெய்த பொழுது இலவச மருத்துவமனைகள், வழிப்போக்கர்கள் தங்க, சத்திரங்கள் போன்ற நன்மையான காரியங்களை மக்களுக்குச் செய்தார். இப்படிப்பட்டவைகளில் குறிப்பிடத்தக்க ஒன்றை சொல்ல விரும்புகிறேன்.

அறுபது மணிகளால் ஆன தங்கமணியொன்றை தனது ஆக்ரா கோட்டையில் நிறுவினார். அந்த மணியில் ஒரு கயிற்றைக்கட்டி யமுனா நதியின் அக்கரையில் நாட்டப்பட்டுள்ள கம்பத்தில் இணைத்து வைத்தார்.



எதற்கு தெரியுமா? நீதித்தேவைப்படும் எந்த மனிதரும் அந்த கயிற்றை இழுத்தால் போதும். அரண்மனையில் மணி ஒலிக்கும். அரசரே நேரில் சென்று நியாயம் செய்வார்.

நன்றாய் யோசித்துப் பாருங்கள். உலகப் பிரகாரமான ராஜா அக்கரையில் உள்ளவர்க்கு நீதி செய்ய இவ்வளவு அக்கறையாய் இருக்கும்பொழுது நம்முடைய பரமபிதா நமக்கு நீதிசெய்ய எவ்வளவு கரிசனையோடு இருப்பார். அரசனை அண்டமுடியாத அக்கரைவாசிக்கு இந்த நீதிசங்கிலி உதவுவது போல் மண்ணில் உள்ள நாமும் ஜெபத்தின் மூலம் விண்ணைத் தட்டமுடியும். விண்ணரசரும் விரைந்து வருவார். வியாகுலங்களை நீக்குவார்.

## 40. சுத்த மனசாட்சி

இது அன்பு சகோதரர் டி.ஜி.எஸ். தினகரன் பிரசங்கத்தின்போது சொன்ன அனுபவ சாட்சி.

ஒருமுறை அவரோடு சேர்ந்து ஒரு குழுவினர் நெய்வேலி நிலக்கரி சுரங்கத்தைப் பார்வையிட சென்றனர். நாற்பது பேர் கொண்ட அந்த குழுவினர் அங்கிருந்த சிற்றுண்டி சாலையில் காபி குடித்தனர். கடைக்காரர் முப்பத்தியொன்பது காபிக்கு மட்டும் விலை போட்டு விட்டார். இதை இவர் கண்டுகொள்ளாமல் காசை கொடுத்து வந்து விட்டார்.

அநேக நாட்களுக்குப் பிறகு இவர் ஜெபிக்கும்பொழுது ஒரு பெரிய தடையை உணர்ந்தார். கடினப்பட்டு ஜெபத்தில் போராடியபொழுது கர்த்தர் பேசினார், "நாற்பது காபி குடித்ததற்கு முப்பத்தியொன்பதிற்கு மட்டுமே பணம் கொடுத்தாய், ஒரு காபிக்குரிய காசு விஷயத்தில் என் நம்பிக்கைக்குரியவனாக நடந்து கொள்ளவில்லையே" என்றாராம். அவ்வளவுதான் அப்படியே மனமுடைந்து போனாராம். அந்த காபிக்குரிய பணத்திற்கு ஈடாக அஞ்சல்தலையை அனுப்பி வைத்த பிறகே இவருக்கு விடுதலை கிடைத்ததாம்.

இதுதான் சுத்த மனசாட்சி. தெய்வபிள்ளையே தவறுக்கு வருந்துவதோ, தேவனிடத்தில் மன்னிப்பு கேட்பதோ பெரிதல்ல, ஒப்புரவாகுதலும் திருப்பிக்கொடுத்தலுமே முக்கியம். சகேயு "நான் நாலத்தனையாய் திருப்பிக் கொடுக்கிறேன்" என்றான். அந்த வீட்டிற்குத்தான் இரட்சிப்பு வந்தது.

## 41. உள்ளத்தை ஒப்புக்கொடு

ஒரு கிராமத்துவாசி நகர்ப்புறத்திற்கு வந்து மிகப்பெரிய சுவர்க்கடிகாரம் ஒன்றை வாங்கினார். "இந்த கடிகாரம் மிகச்சிறந்த கடிகாரம். இதற்கு ஓராண்டு இலவசமாய் சர்வீஸ் செய்து தருவோம்" என்று கடைக்காரர் சொல்லியனுப்பினார்.



மூன்றே நாளில் இந்த கிராமத்துவாசி திரும்பி வந்தார், "ஐயா, கடிகாரம் ஓடவில்லை, சரிசெய்து கொடுங்கள்" என்றாராம். கடைக்காரரோ, கடிகாரம் எங்கே என்று கேட்க இவர் மடியைத் துழாவினாராம். கடைக்காரருக்கு ஏகப்பட்ட குழப்பம். இவ்வளவு பெரிய கடிகாரத்தை எப்படி மடிக்குள் வைக்கமுடியும் என்று யோசித்துக் கொண்டிருக்கும்போதே, கிராமத்துவாசி தனது மடியிலிருந்து கடிகாரத்தின் இரண்டு முற்களை எடுத்து, "ஐயா, கடிகாரம் எல்லாம் நல்லாத்தான் இருக்கு, இந்த முல்லுதான் ஓட மாட்டேங்குது. இதை சரிபண்ணிக்குடுங்க" என்று கூலாகச் சொன்னாராம். கடைக்காரர் அரண்டே போய்விட்டார்.

இப்படித்தான் இன்றும் பலர் இருக்கிறார்கள். இதயத்தைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்காமல் எதை எதையோ ஒப்புக்கொடுக்கிறார்கள். அதனால் தான் அவர்களால் ஓட முடியவில்லை.

## 42. பழக்க தோஷம்

தெற்காசிய நாடுகளின் கடலோரப் பகுதிகளை கடந்த 26.12.2004 அன்று 'சுனாமி' என்ற ஆழிப்பேரலை மிகப்பெரிய அழிவைக் கொண்டுவந்தது. லட்சக்கணக்கான மக்கள் மாண்டனர்.

இலங்கையில் அறியாமையின் நிமித்தம் மரித்தவர்களைக் குறித்து ஒரு தகவலை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். இலங்கையின் தமிழர்பகுதியில் ஆழிப்பேரலையின் இரைச்சல் வீட்டில் உள்ளவர்களுக்கு தெளிவாகக் கேட்டிருக்கிறது. அவர்கள் யாரும் வெளியே வந்து பார்க்கவில்லை. நித்தம் கேட்கிற யுத்த சத்தம் என்று எண்ணி விமானக் குண்டுவீச்சுக்கு தப்பும்படியாக வீட்டிற்குள்ளேயே எல்லாரும் தரையில் படுத்துக் கொண்டனர்.

விடுதலைப் புலிகள் விமானமில்லை, கடலலை வருகிறது தப்புங்கள் என்று எச்சரித்தப்போது சிலர் மாத்திரம் எழுந்து ஓடினர். மற்றவர்களையே வெள்ளம் வாரிக்கொண்டு போனது.

கர்த்தரின் வருகையின்போதும் இப்படிதான் நடக்கும். பழக்கதோஷத்திலே பாதிப்பேர் பரிதாபமான முடிவை அடைவர்.

## 43. பழைய பாக்கி

என்ன நினைத்தாரோ தெரியவில்லை. அருகே நின்றவனை செமத்தியாக அடித்துக் கொண்டிருந்தான். அங்கே வந்த பெரியவர், ‘‘தம்பி, தம்பி நிறுத்துங்க! ஏன் இப்படி கொடூரமாக அடிக்கறீங்க?’’ என்று வினவினார்.



‘‘ஐயா! போடா தேவாங்கு என்று என்னை இவன் திட்டினான். அதற்காகத்தான் அடிக்கிறேன்’’ என்று சொன்னவனைப் பார்த்து, இவன் எப்போ அப்படிச் சொன்னான் என்று கேட்டார்.

இவன் சொன்னான், ‘‘ஆறு மாதத்துக்கு முன்னால் அப்படிச் சொன்னான்’’ என்றான். பெரியவருக்கு ஒரே சிரிப்பு, ‘‘ஏம்பா, ஆறுமாதம் வரைக்கும் சும்மா இருந்துவிட்டு இப்போ அடிக்கிறியே நியாயமா?’’ என்று பெரியவர் கேட்டார்.

‘‘ஆறு மாசத்துக்கு முன்னாடி தேவாங்கு எப்படி இருக்கும் என்று எனக்குத் தெரியாது. நேற்று தான் தேவாங்கை நேரில் பார்த்தேன். பிறகுதான் புரிந்தது என்னை எவ்வளவு கேவலமாய் பேசியிருக்கிறான் என்று. அதான் ஆத்திரம் தீர அடித்து விட்டேன் என்றான்.

சிலர் இப்படித்தான் என்றோ முடிந்துபோன பிரச்சனையை சம்பந்தமில்லா காலகட்டத்தில் தோண்டி எடுத்து பழைய பாக்கியைத் தீர்த்துக் கொள்வார்கள்.

## எமது வெளியீடுகள்

31. நூனின் குமாரனாகிய யோசுவா
32. விசுவாச வீரனாகிய யெப்தா
33. எக்ளீசியா
34. சமயத்திற்கேற்ற பிரசங்க குறிப்புகள்
35. சிங்கத்தை கிழித்த சிம்சோன்
36. அன்புக்குரிய அப்போஸ்தலர்
37. எலியா
38. தெளிவூட்டும் தேன் துளிகள்
39. முற்றிலும் ஜெயம் பெறுவோம்
40. பிரசங்கிப்போருக்கு என் ஆலோசனைகள்
41. நீங்கள் தாழ்ச்சி அடைவதில்லை
42. தீர்க்கதரிசியாகிய எலிசா
43. பராக்கிரமசாலியாகிய கிதியோன்
44. தெய்வீக பிரசங்க குறிப்புகள்
45. அனல் மூட்டும் பிரசங்க குறிப்புகள்
46. ஆவியானவரும் அப்போஸ்தல நட படிகளும்.
47. ஆத்தும ஆதாயகருக்கு என் ஆலோசனைகள்
48. பொருத்தமான பொற்பழங்கள்



## விண்ணக அப்பம்

அன்பார்ந்தவர்களே,

போதகர். கிறிஸ்டோபர் அவர்களின் புத்தகங்கள் படிக்க இயலாதோருக்காகவும், பார்வையற்றவர்களுக்காகவும் ஆடியோ வடிவில் வெளியிடப்படுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. போதகர், கிறிஸ்டோர் அவர்களின் புத்தகங்கள் ஆடியோ வடிவில் விரைவில் கிடைக்கப் பெற உங்கள் ஜெபத்தினாலும், கரத்தினாலும் தாங்குங்கள்.

அலுவலக தொடர்பு எண் : 94888 56323

இப்படிக்கு,

**Pr. அலெக்ஸ் தினகரன்**